**செ.வெ.எண்**.29 **நாள்**:26.05.2026

## பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் (TNCDW), தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM), சிவகங்கை மாவட்ட இயக்க மேலாண்மை (DMMU) அலகிற்குட்பட்ட கீழ்காணும் வட்டார இயக்க மேலாண்மை அலகில் (BMMU) கிராமப்புற பகுதிகளில் காலியாகவுள்ள தற்காலிகப்பணியான சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் பணியிடத்திற்கு தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள்:29.05.2026 மாலை 5.00 மணி வரை

காலிப்பணியிடங்கள் விபரம்

| வ.எண் | வட்டாரம் | தற்காலிகப்பணியான சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர் காலிப்பணியிட விபரம் | | |
|---|---|---|---|---|
| | | ஒப்பளிக்கப்பட்ட பணியிடம் | பணியில் உள்ளவர்கள் | காலிப்பணியிடம் |
| 1 | மானாமதுரை | 21 | 10 | 11 |
| 2 | திருப்புவனம் | 21 | 12 | 9 |
| 3 | சிவகங்கை | 17 | 3 | 14 |
| 4 | கல்லல் | 13 | 7 | 6 |
| 5 | தேவகோட்டை | 16 | 6 | 10 |
| 6 | கண்ணங்குடி | 6 | 1 | 5 |
| 7 | காளையார் கோவில் | 18 | 9 | 9 |
| 8 | திருப்பத்தூர் | 15 | 9 | 6 |
| 9 | சாக்கோட்டை | 11 | 3 | 8 |
| 10 | இளையான்குடி | 17 | 13 | 4 |
| 11 | சிங்கம்புணரி | 13 | 9 | 4 |
| 12 | எஸ்.புதூர் | 9 | 9 | 0 |
| மொத்தம் | | 177 | 91 | 86 |

தேர்ந்தெடுக்கப்படவுள்ள சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் கீழ்கண்ட ஐந்து வகையான பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

1. சுய உதவிக்குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பு பெற்று தருதல் மற்றும் வாராக் கடன் வசூல் செய்தல்.
2. நிதி கல்வி அளித்தல்
3. காப்பீடு திட்டங்களின் சேவைகளை வழங்குதல்
4. மின்னணு நிதி சேவை வழங்குதல்
5. சுய உதவிக்குழு உறுப்பினர்கள் தனிநபர் தொழில் கடன் பெற வழி வகை செய்தல்.

தேர்வு பெறும் நபர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்களுக்கான மேற்கண்ட பணிகளை நிறைவேற்ற வேண்டும்.

விண்ணப்பதாரர்களுக்கான தகுதிகள்:

| | | |
|---|---|---|
| 1 | கல்வித்தகுதி | ➢ 12-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தமிழ் மற்றும் ஆங்கிலம் நன்றாக எழுதப்படிக்கவும் மற்றும் கணக்கிடும் திறன் உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.<br>➢ மலைப்பகுதிகளில் 12-ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற நபர்கள் இல்லாத நிலையில் 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் இதர தகுதிகளுடன் இருப்பின் மாவட்ட ஆட்சியரின் சிறப்பு அனுமதியுடன் தகுதியுடையவர்களாக கருதப்படலாம். |
| 2 | வயது | ➢ விண்ணப்பிக்கும் நாளில் 35 வயதுக்கு கீழ் இருத்தல் வேண்டும். |
| 3 | தகுதிகள் | ➢ ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு சார்ந்த பெண் சுய உதவிக்குழு உறுப்பினராக இருத்தல் வேண்டும்<br>➢ சுய உதவிக்குழு ஊக்குநராக குறைந்த பட்சம் 2 ஆண்டுகள் பணியாற்றி இருக்க வேண்டும்.<br>➢ சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர் பணிக்கு தேர்வு செய்யப்படும் நபர் சமுதாயம் சார்ந்த அமைப்பு பணியாளராகவோ அல்லது தனியார் நிறுவனங்களில் முழு நேரப்பணியாளராக பணி இருத்தல் கூடாது.<br>➢ வாராக்கடன் உள்ள குழுவின் உறுப்பினராக இருத்தல் கூடாது. |

| | | |
|---|---|---|
| 4 | குடியிருப்பு | ➢ தேர்வு செய்யப்பட வேண்டிய உறுப்பினர் பணிபுரியும் ஊராட்சியை (அல்லது ஊராட்சிகளை) சார்ந்தவராக இருத்தல் அவசியம்.<br>➢ மக்கள் நிலை ஆய்வால் கண்டறியப்பட்ட இலக்கு மக்களாக இருத்தல் வேண்டும். (உரிய தகுதிகளுடன் இலக்கு மக்கள் விண்ணப்பிக்காத பட்சத்தில், பிற விண்ணப்பதாரர்களை கருத்தில் கொள்ளலாம்.)<br>➢ மலைப்பகுதியிலுள்ள ஆதி வாசிகள் குடியிருப்புகளில் மேற்கூறிய உறுப்பினர் இல்லாத நிலையில் ஆண் உறுப்பினரை மாவட்ட ஆட்சித்தலைவரின் சிறப்பு ஒப்புதலுடன் தேர்வு செய்யலாம். |
| 5 | இதர நிபந்தனைகள | ➢ தகவல் தொடர்பு திறன் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.<br>➢ வங்கிகளுக்குச் சென்று பரிவர்த்தனைகள் செய்தும் கடன் விண்ணப்பங்கள் பூர்த்தி செய்தும் அனுபவம் உள்ளவர்களாக இருத்தல் அவசியம்.<br>➢ கணினி திறன் மற்றும் இரு சக்கர வாகனம் ஓட்டுநர் உரிமம் உள்ள இருசக்கர வாகனம் ஓட்ட தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.<br>➢ ஆண்ட்ராய்டு (Android) கைப்பேசி வைத்திருப்பவர்களாகவும் அதை இயக்கி குறுந்தகவல் (SMS) மற்றும் Whatsapp -ல் செய்தி அனுப்பவும் மற்றும் செயலி இயக்கும் திறன் பெற்றவர்களாகவும் இருத்தல் அவசியம். |

விண்ணப்ப கடிதத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

1.விண்ணப்பதாரரின் பெயர், பிறந்த தேதி, வயது, பாலினம், கல்வித்தகுதி, வசிப்பிட முகவரி, கைப்பேசி எண் ஆகிய விபரங்களை விண்ணப்ப கடிதத்தில் தெளிவாக பிழைகள் ஏதுமின்றி குறிப்பிட்டிருக்க வேண்டும்.

2 . 12th கல்வி தகுதிக்கான சான்று.

3. வயது சான்று (ஆதார், PAN Card, ஓட்டுநர் உரிமம்)

4. முகவரிக்கான சான்று

5. இரண்டு சக்கர வாகன ஓட்டுநர் உரிமம்

மதிப்பூதியம்:

சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர் ஒரு மாதத்திற்கான மதிப்பூதியம்:ரூ.2500/-

தேர்வு முறை:

தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாவட்ட தேர்வுகுழு மூலமாக எழுத்துத்தேர்வு மற்றும் நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டு பெறப்படும் Weightage மதிப்பெண்களின் அடிப்படையில் தகுதியான நபர்கள் தேர்வு செய்யப்படுவர்.

| தேர்வு நிலை | மதிப்பெண் |
|---|---|
| 1.எழுத்துத் தேர்வு | 75 |
| 2.நேர்முகத் தேர்வு | 25 |

விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டிய முறை:

விண்ணப்பங்களை அரசு வேலை நாட்களில் 23.05.2026 முதல் 29.05.2026 வரை காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை கீழ்காணும் முகவரியில் வைக்கப்பட்டுள்ள மூடி முத்திரையிடப்பட்ட பெட்டியில் நேரிலும் அல்லது பதிவஞ்சல் மூலமாகவே அனுப்பலாம் தாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி

இணைஇயக்குநர்/திட்ட இயக்குர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,
ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி கட்டிடம்,
மாவட்ட ஆட்சியரக வளாகம்,
சிவகங்கை மாவட்டம்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், சிவகங்கை.**

@ Svg PRO    @SivagangaiDist    @PROSIVAGANGAI